1983 பிப்ரவரி 12]

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, டீசல் விலை உயர்வும், அதே நேரத்திலே மெஷினரி போன்ற உதிரி சாமான்களின் விலை உயர்வும் காரணம் என்று சொல்லும் பொழுது, டீசலின் விலை உயர்ந்தபொழுது, மத்திய அரசு வரி விதிக்கும் பொழுது மாநில அரசின் கருத்துரையைக் கேட்க வேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே, டீசல் விலையை உயர்த்தக் கூடாது என்று நாம் கேட்டிருந்தோம். அப்படி உயர்த்தினால் போக்குவரத்திற்கு நாம் செலவழிக்கும் இந்த டீசலுக்கு அவர்கள் சப்சிடி கொடுக்க வேண்டுமென்றுக்கூடக் கேட்டோம். ஆனால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணமாகப் பல்வேறு விஷயங்களைக் குறிப்பிட்ட நேரத்தில், போனஸைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். அப்படி என்றால் சென்ற வருஷத்திலே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலும், சேரன் போக்குவரத்துக் கழகத்திலும் இலாபம் ஏற்பட்டதற்குப் பிறகும் கூட அங்கேயுள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் முந்தைய வருஷத்தில் கொடுக்கப்பட்டதை விடக் கம்மியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு கொடுத்த 20 சதவீதம் என்ற அந்த அளவிற்கு ஏன் கொடுக்கப்படவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். இலாபம் வந்திருக்கிறதே தவிர, 20 சதவீதம் கொடுக்கின்ற அளவிற்கு வரவில்லை. ஆனாலும், இலாபம் வந்ததற்கும் மேலாக நாம் போனஸ் கொடுத்து விட்டோம்.

சென்னை நகரில் ஓடிக் கொண்டிருக்கும் மூன்று சக்கரங்களை கொண்ட மினி டாக்சிகள்.

*வினா எண் 256—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூன்று சக்கரங்களைக் கொண்ட மினி டாக்சிகள் சென்னை நகரில் எத்தனை ஓடுகின்றன ?

(ஆ) அத்தகைய டாக்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 30.

(ஆ) இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று சக்கரங்களைக் கொண்ட மினி டாக்சிகள் மற்ற டாக்சிகளை விட போவதற்கு எளிதாக இருக்கின்றது. அதே நேரத்தில் கட்டணமும் குறைவு. இதைக் கருத்திற் கொண்டு இந்த டாக்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதை இயக்குபவர்கள் முன்வந்தால் அரசு பரிசீலிக்கும்.

வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பனைப் பொருட்கள்.

*வினா எண். 257—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை மரத்திலிருந்து உற்பத்தியாகும் பொருட்கள் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எங்கெங்கே இந்த பனைப் பொருள்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதனால் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பனைப் பொருள்கள் சம்பந்தமாக பனைத் தும்பு குளச்சலிலே தயாரிக்கப்பட்டு, தூத்துக்குடியிலிருந்து அது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நிலை இருக்கிறது. பனைப் பொருள்களிலிருந்து கிடைக்கின்ற ஓலைப் பொருள்களும் மற்றப் பொருள்களும், மதுரையை மையமாகக் கொண்டு தமிழகம் முழுவதிலும் இருந்து தயாரிக்கப் படும் பொருள்கள் அனைத்தும், மதுரைக்கு வரவழைக்கப்பட்டு அங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

---

*244 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.